# DEPOSTITION OF WITNESS

# IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT MUNSIF, NAGERCOIL

## O.S. No. 136 of 2022

**Deposition of the Witness : CW1**

Solemnly Affirmed by Thiru/Tmt. Bench Clerk in accordance with the provision of Act X of 1873.

| | | |
|---|---|---|
| Name | : | T.V.S. Dhinesh Varma |
| Father's Name / Husband's name | : | சண்முகம் |
| Village | : | தெங்கம்புதூர் |
| Taluk | : | அகஸ்தீஸ்வரம் |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 13.03.2026 |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

மனு எண் 10/26 அனுமதிக்கப்பட்டதன் பெயரில் நீதி மன்ற ஆணையர் விசாரணை

மேற்கொள்ளப்படுகிறது.

நான் வழக்குப் பட்டிகை சொத்தினை பார்வையிடுவதற்கு முன்பாக வழக்குரை மனு எண் 2/2022 மற்றும் இதர ஆவணங்களை படித்து பார்த்தேனா என்றால் பட்டிகை சொத்து சம்மந்தமான ஆவணங்கள் என்னிடம் தரவில்லை வழக்குரை மற்றும் மனு எண் 2/2022 படித்து பார்த்தேன். வழக்கு பட்டிகை சொத்தை எதன் அடிப்படையில் அளவீடு செய்தேன் என்றால் வழக்குரை மற்றும் எனக்கு அளித்த வாரண்டில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரங்களின் அடிப்படையில் அளவீடு செய்தோம்.

கிடப்புபடியோ ரீசர்வை படியோ வழக்குப் பட்டிகை சொத்தினை அளவீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. ரீசர்வே படியும், கிடப்புபடியும் அளக்கப்பட்டன. கிடப்புபடி அளவீடு செய்து எந்த வரைபடமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கிடப்பு மற்றும் FMB யின் அடிப்படையிலும் அளவீடு செய்து வரைபடம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி விவரத்தை நான் நிமாசா 1ல் நான் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. நிமாசாஆ 1, 3ம் பக்கத்தில் 2ம் வினாவிற்கு உண்டான பதிலில் குறிப்பிட்டுள்ளேன்.

வழக்குப் பட்டிகை சொத்தின் விஸ்தீரணத்தை நிர்ணயிக்கும் முன்பாக எந்தெந்த சொத்துக்களின் அளவுகளை எடுத்தோம் என்றால் வழக்குப் பட்டிகை சொத்து இருக்கும் ரோட்டின் கிழக்கற்றத்தில் இருந்து மேற்க்காக சர்வே எண் 250/10, 256/9,256/5 ஏ ஆகிய சொத்துக்களை அளவீடு செய்து வழக்கு பட்டிகை சொத்தை அளவீடு செய்து நிர்ணயித்தோம். மேற்படி கூறியவாறு தெற்கே உள்ள சொத்திற்கு மட்டும் அளவீடு செய்துள்ளோம் ஆனால் வடக்கு பக்கம் உள்ள சொத்திற்கு அவ்வாறு அளவீடு

செய்யவில்லை என்றால் சரிதான். வடக்கு பக்கம் எல்கை கற்கள் இல்லை . முழுவதுமாக அடைக்கப்பட்டு இருந்தது ஆகையால் அளவீடு செய்ய இயலாது. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் வாதியினுடைய சொத்து வழக்கு பட்டிகை சொத்திற்கு வடக்கு பக்கம் தான் உள்ளது என்றால் சரியல்ல. வடக்கு பக்கம் சர்வே எண் 256/6 ஏ, 256/6 பி, மற்றும் 256/4 என்ற சொத்துக்கள் இருக்கின்றன. இதில் 256/6 பி மட்டும் தான் வாதியினுடையது.

வழக்கு ஏ மற்றும் பி பட்டிகைகளில் ஏ பட்டிகை சொத்தினை தனியாக அளந்து நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஏ மற்றும் பி பட்டிகை சேர்ந்து ஒரு பாதை அதனை சேர்த்து அளந்து அறிக்கை தாக்கல் செய்துள்ளேன். வழக்கு ஏ பட்டிகை சொத்திற்கான சர்வே எண் 256/6 பி என்றால் சரிதான். நிமாசாஆ 2 ல் சர்வே எண் 256/5 பி -க்கான வரைபடம் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண் 256/5 பி மற்றும் 256/6 பி -யையும் சேர்த்து வரைபடம் தாக்கல் செய்துள்ளேன். நிமாசாஆ 2 ல் சர்வே எண் 256/5 பி -க்கான வரைபடம் தான் குறிப்பிடப்பட்டுள்ளது சர்வே எண் 256/6 பி -குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

நிமாசாஆ 1 நீதிமன்ற அறிக்கை பக்கம் 5 ல் பிரதிவாதிகள் தரப்பில் கொடுக்கப்பட்ட மெமோவில் பிரதிவாதியின் சொத்து வழக்குரை ஏ மற்றும் பி பட்டிகை சொத்திற்கு மேற்கு பக்கம் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வழக்குரையில் ஏ பட்டிகை சொத்திற்கு மேற்கு பக்கம் வாதியின் சொத்து இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி உள்ள ரோட்டில் வாதியின் சர்வே எண் 256/5 பி சொத்து உள்ளது. மேற்படி சொத்தின் வடக்கு பக்க முடிவில் மேற்கே திரும்பினால் சர்வே எண் 256/6 பி ஏ பட்டிகை சொத்து உள்ளது. மேற்படி இரண்டு சொத்துக்களையும் சேர்த்து நான்

அளந்ததால் பிரதிவாதியின் சொத்து மேற்கே உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன். தென்வடலாக ரோடு இல்லை என்றால் சரிதான். அது பாதை. வழக்கு ஏ மற்றும் பி பட்டிகை சொத்து வெவ்வேறு சர்வே எண்கள் என்றால் சரிதான்.

வழக்கு பி பட்டிகை சொத்திற்கு வடக்கு பகுதியில் தான் ஏ பட்டிகை சொத்து உள்ளது என்றால் சரியல்ல. நேர்வடக்காக இல்லை. பிரதிவாதியின் சொத்திற்கு பின்புறம் உள்ளது.

வழக்கு பி பட்டிகை பாதையின் தொடர்ச்சி தான் ஏ பட்டிகை பாதை என்றால் சரிதான். வழக்கு பி பட்டிகை சர்வே எண் 256/5 ல் உட்பிரிவு செய்யப்பட்ட 5 பி என்றால் சரிதான். மேற்படி சர்வே எண் 256/5 -யை அளவீடு செய்தேனா என்றால் அளவீடு செய்தோம். மேற்படி விவரத்தை நிமாசாஆ 1ல் குறிப்பிட்டுள்ளேனா என்றால் பக்கம் 3 ல் வாதியின் மெமோவில் 2 வது வினாவில் குறிப்பிட்டுள்ளேன்.

வழக்கு பட்டிகை சொத்தினை அளக்கும் சமயத்தில் பிரதிவாதியின் வழக்கறிஞர் இருந்தார் என்றால் சரிதான். நான் சர்வே எண் 256/5 யை அளவீடு செய்யவில்லை பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சர்வே எண் 256/5 யை சர்வே எண் 256/5 பி - யை அளவீடு செய்ய இயலாது. நான் வடக்கு பக்கம் உள்ள சொத்துக்களை அளக்க இயல வில்லை என்று கூறிவிட்டு தற்போது சர்வே எண் 256/5 யை முழுமையாக அளக்கவில்லை என்றால் சரியல்ல. கிழக்கிலிருந்து மேற்காக எல்கை கற்களை கொண்டு முன் பகுதியை மட்டும் அளவீடு செய்தோம். அவ்வாறு அளவீடு செய்ததில் சர்வே எண் 256/10, 256/9,256/5 ஏ வரை உள்ள சொத்துக்களுக்கும் FMB படியும் கிடப்புபடியும் சரியாக அளவு இருந்தது. ஒரு சொத்தினை முழுமையாக அளவீடு செய்யாமல் அது முழுமை அடையாது என்றால் சரியல்ல. தரப்பினர் அல்லாத சொத்து அது. மேற்படி

சொத்து ஏற்கனவே வாதியின் வசம் இருந்தது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக  வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது,**